# மாணவர் சக்தி

மாத இதழ்

Manavar Sakthi Monthly Magazine



# முண்டாசு கவி ஒரு அறிமுகம்

பாரதிக்கு அடையாளம் தமிழா அல்லது தமிழுக்கு அடையாளம் பாரதியா என்று வித்தியாசம் காண முடியாத அளவுக்கு வாழ்ந்து காட்டியவர். அதை தன் கவிதை ஒன்றில் கவி என்பவன் எப்படி இருக்க வேண்டும் என குறிப்பிட்டும் சொல்லி உள்ளார்.

கவிதை எழுதுபவன் கவியன்று. கவிதையே வாழ்க்கையாக உடையோன்,

வாழ்க்கையே கவிதையாகச் செய்தோன், அவனே கவி.

பாரதியாரின் இயற்பெயர் சுப்ரமணியன். செல்லப் பெயர் சுப்பையா. பாரதி, முண்டாசு கவிஞன், முறுக்கு மீசைக்காரன், மகாகவி இதெல்லாம் பாரதியாரின் சிறப்புப் பெயர்கள்.

பாரதியாரின் பிறந்த தேதியும், இறந்த தேதியும் ஒன்று. ஆம். 11ம் தேதி.

1882ல் டிசம்பர் 11 ம் தேதி பிறந்தார்.

அப்பா சின்னசாமி ஐயர். அம்மா இலக்குமி அம்மாள். தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள [அன்றைய திருநெல்வேலி மாவட்டம்] எட்டயபுரத்தில் பிறந்தார்.

பாரதி தன் 5வது வயதில் தாயை இழந்தார். அதனால் அவரது பாட்டியான பாகீரதி அம்மாளிடம் வளர்ந்தார். [1887]

பாரதியின் 7 வயதில் அவரது தந்தை மறுமணம் செய்துகொள்கிறார். அவர் தன் ஏழு வயதில் இருந்தே கவிதைகள் எழுதத் தொடங்கினார்.

பாரதிக்கு 11 வயதானபோது அவரது கவி பாடும் ஆற்றலையும் புலமையையும் வியந்து பாராட்டி அவருக்கு பாரதி என்ற பட்டத்தை வழங்கினார் எட்டயபுர மன்னர். பாரதி என்றால் சரஸ்வதி, கலைமகள் என்று பொருள்.

## பாரதியின் படிப்பும் திருமணமும்

பாரதி தமிழுலகில் தமிழ்



கனவுகளோடு சஞ்சரித்துக் கொண்டிருக்க, அவரது தந்தையோ தனது மகன் தொழில்நுட்பத் துறையில் பட்டம்பெற விரும்பினார். அவரை தமிழ்ப்பள்ளியில் சேர்க்காமல் ஆங்கிலமும் கணிதமும் பயில்வதற்காக திருநெல்வேலிக்கு அனுப்பி வைத்தார். திருநெல்வேலி ஹிந்து காலேஜில் படித்தார்.

அவரது 14 வயதில் பாரதிக்கும் 7 வயதுச் செல்லம்மாவுக்கும் திருமணம் நடைபெற்றது. ஆனால் பின்னாளில் இது போன்ற பால்ய விவாகத்தை வன்மையாக கண்டித்தார் பாரதி.

'பாலருந்தும் மழலையர் தம்மையே கோலமாக மணத்திடைக் கூட்டும் இப்பாதகர்கள் இன்னும் ஆயிரமாண்டு அடிமைகளாக இருந்து அழிவர்'

## தந்தையையும் இழந்த பாரதி

பாரதிக்கு 16 வயதிருக்கும்போது, பாரதியின் தந்தை எட்டயபுரத்தில் பருத்தி அரவை ஆலை நிறுவுவதற்காக வெளிநாட்டிலிருந்து இயந்திரங்களையும் உதிரிப் பாகங்களையும் வரவழைக்க ஏற்பாடு செய்திருந்தார். கப்பல்களில் வந்துகொண்டிருந்தவை கடலில் மூழ்கவே அவருக்கு பெரும் இழப்பு ஏற்பட்டது.

அந்தக் கவலையிலிருந்து மீள முடியாமல் நோய்வாய்ப் பட்டு அவர் இறந்து போனார். அதன் பின்னர் காசியில் அத்தை குப்பம்மாளுடன் வசிக்கத் தொடங்கினார். காசிக்குச் சென்று அலகாபாத் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து சமஸ்கிருதத்தையும் இந்தியையும் கற்றார். சமஸ்கிருத மொழியில் முதல் வகுப்பில் தேறினார்.

## பல மொழிகளில் புலமை

ஆங்கிலக் கவிஞர்களான ஷெல்லி, பைரன் போன்றோரின் கவிதைகளில் அவருக்கு அதிக ஈடுபாடு ஏற்பட்டது அதன்காரணமாக அவர் பின்னாளில் ஷெல்லிதாசன் என்ற புனைப்பெயரில் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்.

இந்தி சமஸ்கிருதம் தவிர்த்து ஆங்கிலம், பெங்காலி, போன்ற மொழிகளிலும் புலமைப் பெற்றிருந்தார் பாரதி அத்தனை மொழிகளில் புலமைப் பெற்றிருந்தாலும் 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்று பாடினார் பாரதி.

மணியாச்சி சந்திப்பில் கலெக்டர் ஆஷ் கொலை செய்யப்பட்ட நிகழ்வின்போது பாரதியின் மீதும் சந்தேக ரேகை விழுந்தது. வழக்கில் இவரும் விசாரிக்கப்பட்டார்!

போலீஸ் விசாரணையின் போது ``நீங்கள் லண்டனில் படித்தவரா? உச்சரிப்பு இவ்வளவு துல்லியமாக இருக்கிறதே?" என்று ஆச்சர்யப்பட்டாராம் அதிகாரி!

## பாரதியின் 4 வழிகாட்டிகள்

பாரதிக்கு பத்திரிகை, அரசியல், ஆன்மிகம் மற்றும் பெண்ணியம் என நான்கு துறைகளிலும் வழிகாட்டிகள் இருந்திருக்கின்றனர். பத்திரிகை குரு `தி இந்து' பத்திரிக்கையின் ஜி சுப்பிரமணிய ஐயர், அரசியலுக்கு திலகர், ஆன்மிகத்துக்கு அரவிந்தர், பெண்ணியம் போதித்தவர் சகோதரி நிவேதிதா தேவி!

## பாரதியின் தலைப்பாகையும், கறுப்பு கோட்டும்

வேட்டி சட்டை, கறுப்பு கோட், தலைப்பாகை தான் அவரது அடையாளம். சட்டையில் ரோஜா, மல்லிகை என ஏதேனும் ஒரு பூவைச் சொருகி வைத்திருப்பார்!

## பாரதியும் பெண்ணியமும்

ஒரு முறை, பாரதியார் சகோதரி நிவேதிதாவை சந்தித்தபோது, அவரது மனைவியை அழைத்து வரவில்லையா என பாரதியாரிடம் கேட்டுள்ளார். அதற்கு பாரதியார், எங்கள் சமுதாய வழக்கப்படி மனைவியை வெளியில் எங்கும் அழைத்துச் செல்வதில்லை என குறிப்பிட்டார். மேலும் தனது மனைவிக்கு அரசியல் குறித்து எதுவும் தெரியாது என்றும் கூறினார்.

இதைக் கேட்ட சகோதரி நிவேதிதை வருத்தத்துடன் பாரதியாரிடம், 'உங்கள் மனைவிக்கே நீங்கள் சம உரிமையும்,

விடுதலையும் கொடுப்பதில்லை. இந்நிலையில், நீங்கள் நாட்டுக்கு எவ்வாறு விடுதலை பெற்றுத்தர போகிறீர்கள்', என்று கேட்டார். இந்த உரையாடல் தான் பாரதியாருக்கு பெண்களைப் பற்றிய சிந்தனையை மாற்றி, பெண்ணுரிமைக்காக போராட தூண்டுகோலாக இருந்தது.

### மற்றொரு நிகழ்வு.

பாரதியார் ஒருமுறை கல்கத்தாவில் ஒரு மாநாட்டுக்குச் சென்றிருந்தபோது, தேசப் பக்தர்கள் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதில், பாரதியாரும் கலந்து கொண்டார். கூட்டம் முடியும் தருவாயில், பாரதி தன்னை சகோதரி நிவேதிதாவிடம் அறிமுகப்படுத்திக் கொண்டார்.

அத்துடன், தான் இயற்றிய சில பாடல்களையும் பாடிக்காட்டினார். அதனைக் கேட்டுப் பெரிதும் மகிழ்ந்தார் நிவேதிதா. அப்போது, 'உன் கவித் திறமையை பாரத மாதா, சுதேசி சேவைக்கே உபயோகிக்க வேண்டுகிறாள்...' என்று பாரதியிடம் வேண்டுகோள் வைத்தார் நிவேதிதா.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு... நிவேதிதா, பாரதியின் வழிகாட்டியாய், ஞானகுருவாய் விளங்கினார்.

பாரதியார் உணர்ச்சி ததும்பும் பாடல்களைப் பாடுவதற்கும், தீவிரமாகச் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கும் சகோதரி நிவேதிதாவே காரணமாக இருந்தார்.

பின்னாளில் தான் எழுதிய 'ஸ்வதேச கீதங்கள்' முதல் பகுதியை பாரதியார், நிவேதிதையை குருவாக ஏற்றுக்கொண்டு அவருக்கு சமர்ப்பணம் செய்தார்.

எப்போதும் மனைவி செல்லம்மாளின் தோளில் கையைப் போட்டுத்தான் சாலையில் அழைத்துச் செல்வார். `பைத்தியங்கள் உலவப் போகின்றன' என்று ஊரார் கிண்டலடிக்க, இவர் பாடியதுதான்,

### `நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை பாட்டு!

பாரதியும் பாரதிதாசனும் சேர்ந்து ஒருநாள் அடுப்பு பற்ற வைத்தார்கள். அடுப்பு பற்றவே இல்லையாம். சமையல் செய்யப் பெண்கள் எவ்வளவு சிரம்ப்படுவார்கள் என்பதை உணர்ந்து `பெண்கள் வாழ்கவென்று கூத்திடுவோமடா' என்ற பாட்டை அன்று தான் எழுதினார் பாரதி. மனைவியைத் திட்டுவதையும் நிறுத்தினாராம்!

### பாரதியின் சென்டிமெண்ட்டுகள்

லட்சுமி, சரஸ்வதி, கிருஷ்ணன் ஆகிய மூன்று தெய்வங்களின் படங்களும் வைத்திருப்பார். கிருஷ்ணர் படத்துக்குக் கீழே பிச்சுவா கத்தி இருக்கும். தினமும் இதை வணங்கிய பிறகுதான் வழக்கமான வேலைகளை ஆரம்பிப்பாராம்.

விவேகானந்தரின் சிஷ்யையான நிவேதிதா தேவி இவருக்கு இமயமலையில் இருந்து எடுத்து வந்த ஒரு ஆல மர இலையைக் கொடுத்திருந்தார். அதை பாரதி மரணிக்கும் வரையில் பொக்கிஷமாக பாதுகாத்தார்.

### பாரதியின் தைரியம்

'மிஸ்டர் காந்தி! கடற்கரையில் நாளை பேசுகிறேன். நீங்கள் தலைமை வகிக்க வர வேண்டும்' என்று இவர் சொன்னபோது, 'கூட்டத்தை மறு நாளுக்கு மாற்ற முடியுமா?' என்று கேட்டார் காந்தி. 'அது முடியாது ஆனால், நீங்கள் ஆரம்பிக்கப்போகும் இயக்கத்துக்கு என்னுடைய ஆசி' என்று சொல்லிவிட்டு வெளியேறிய பாரதியைப் பார்த்துக்கொண்டே இருந்தார் காந்தி. 'இவரைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும்' என்று அருகில் இருந்தவர்களிடம் கவலைப்பட்டார் காந்தி!

